டிசம்பர் 2024
மலர் 23, இதழ் 3

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# கிறிஸ்துமஸ் பண்டிகையும் - நாமும்



# கிறிஸ்துமஸ் பண்டிகையும் - நாமும்

*"பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" லூக்கா 2 : 10*-இன் படி உலகமெங்கும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் சந்தோஷமானதும் மகிழ்ச்சியுமான பண்டிகை கிறிஸ்துமஸ் பண்டிகை. கிறிஸ்துமஸ் என்றாலே சிறுவர் முதல் பெரியவர் அனைவருக்கும் இனம்புரியாத குதூகலம் நிறைந்ததும், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற மதத்தினரும் கூட வீட்டின் முன்பு விதவிதமான ஸ்டார்களை வைத்தும் மகிழும் பண்டிகை.

இதுவரைக்கும் நாம் பண்டிகையை எப்படி கொண்டாடினோம் என்று பார்க்காமல், இந்த ஆண்டு எப்படிக் கொண்டாடினால் இது அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் பண்டிகையாக இருக்கும் என பார்ப்போம். இதைக் குறித்து *1. இரட்சிப்பு, 2. எச்சரிப்பும், வேறு வழியும்* மற்றும் *3. பிரசித்தம் பண்ணுதல்* (நற்செய்தி அறிவித்தல்) என்ற 3 தலைப்புகளில் பார்ப்போம்.

## *I. இரட்சிப்பு*

இயேசு கிறிஸ்து இந்த உலகில் எதற்காகப் பிறந்தார் என்று மத்தேயு அதி. 1 : 21-ஆம் வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. அவர் பிறந்ததின் முக்கிய நோக்கம் *இரட்சிப்பு*. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார். இந்த வசனத்தின் படி, அவரின் பிறப்பின் முக்கிய செய்தி *இரட்சிப்பு. இரட்சிப்பு* என்ற வார்த்தை வேதத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் சேர்த்து ஏறக்குறைய 150 முறைக்கு மேல் காணப்படுகிறது. *இரட்சிப்பு* என்ற ஒரு வார்த்தையின் பொருள் *விடுதலை*. கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுகின்ற நாம் *இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா?* என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். ஒரு *இரட்சிக்கப்படாத* கிறிஸ்தவன், கிறிஸ்துமஸ் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியாமலேயே கொண்டாடுவது அறியாமையின் வெளிப்பாடே.

அப்போஸ்தலர் 2 : 47-இன் படி, *"...இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்,"* இன்றைய நாட்களில் நம் சபைகளில் மன வேற்றுமையும், சண்டையும், சச்சரவும் பிரிவினைகளுமே காணப்படுகிறது. ஏனென்றால், சபைகளில் *இரட்சிக்கப்படாத ஜனங்கள்* இருப்பதினால் தான். நம்முடைய நிலைமை எவ்வாறு உள்ளது? எரேமியா 8 : 20 வசனம் சொல்கிறது, *அறுப்புக் காலம் சென்றது, கோடை காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை*. நம்மில் பலர் இப்படிப்பட்ட பரிதபிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகிறோம். அலட்சியத்தோடு வாழும் அனைவருக்கும் இது வேதாகமம் உணர்த்தும் எச்சரிப்பு. *"...இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?"* எபிரேயர் 2 : 4 ஆகவே... *இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்* (2 கொரி 6 : 2). ஆகவே, நாட்களைக் கடத்தாமல், உதாசீனத்தை உதறிவிட்டு, இன்றைய நாளையே இரட்சிப்பின் நாளாக பயன்படுத்திக் கொள்ளுவோம். மேலும் ஒவ்வொரு நாளிலும், புதிதாக்கப்பட்ட வாழ்க்கையை மெருகேற்றியபடியே கர்த்தருக்குள் நிலைத்து வாழ்வோம்.

*"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" மத்தேயு 24 : 13. இரட்சிப்பின்* வாழ்வில், நிலை நின்று, ஓடி முடிக்க வேண்டியவர்களாய் இருக்க எச்சரிக்கப்படுகிறோம். *கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி*

*ஆனந்தக் களிப்புடன் பாடி, (இரட்சிக்கப்பட்டவர்களின் ஆசீர்வாதம்) சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசாயா 35 : 10).*

## II. எச்சரிப்பும், வேறுவழியும்

சாஸ்திரிகள் ... *தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். மத்தேயு 2 : 12.*

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிந்து, பெத்லகேமில் வந்துப் பணிந்து கொண்ட சாஸ்திரிகள், தேவனால் எச்சரிக்கப்பட்டு, ஏரோதினிடத்திற்கு திரும்பிப் போகாமல், வேறு வழியாகத் திரும்பிப் போனார்கள்.

வேதத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அநேக எச்சரிப்புக்களின் சத்தம் மற்றும் எச்சரிப்புகள் வருகின்றன. இவைகள் நமக்கு நன்மையுண்டாகும் படி கொடுக்கப்பட்டுள்ளன. 1 இராஜாக்கள் 13 : 10-இன் படி யெரோபெயாமின் வார்த்தைகளுக்கு இணங்காமல் யூதேயாவிலிருந்து வந்த தேவனுடைய மனிதன், கர்த்தருடைய (கட்டளை) எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந்து, வேறு வழியாகப் போய்விட்டான். அதே வேளையில், எச்சரிப்புக்கு கீழ்ப்படியாத சாலொமோன் ராஜா, தன்னை உயர்த்தி, ஆசீர்வதித்த தன் தேவனை மறந்து, கர்த்தரின் உடன்படிக்கையையும், கட்டளைகளையும் கைக்கொள்ளாமல், சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றியதால், ராஜ்யபாரத்தை இழந்தான். சாலொமோன் இராஜா (The ever Wisest) ஞானத்திலும், அறிவிலும் ஈடு இணையற்று வாழ்ந்த போதிலும், அந்நிய தேவர்களைப் பின்பற்றி கர்த்தர் அருளிய ஞானத்தை உதாசீனம் செய்தான். கர்த்தருக்கென்று 3000 நீதிமொழிகளையும் 1005 பாடல்களையும், ஆலயத்தையும் கட்டுவித்தான். ஆனால், கர்த்தருடைய கட்டளைக்கு 2 முறை எச்சரித்தும், (1 இராஜா. 11 : 9) கீழ்ப்படியாமற் போனதினால், எபிரெயர் நிருபத்தில் உள்ள (11-32) விசுவாசப் பட்டியலில் அவன் பெயர் இல்லாமற் போயிற்று. என்ன பரிதாபம்! ஆனால் மத். 2 : 12-இன் படி கிழக்கிலிருந்து வந்த வான சாஸ்திரிகள் கர்த்தருடைய எச்சரிப்புக்குக் கீழ்படிந்து, குழந்தையாகிய இயேசுவைக் கண்ட பிறகு, வேறு வழியாக திரும்பிப் போனார்கள். ஒருவேளை வான சாஸ்திரிகள் கர்த்தருடைய எச்சரிப்புக்குக் கீழ்ப்படியாமல் வந்த வழியிலேயே சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? ஏரோதைக் கண்டிருப்பார்கள். குழந்தையைப் பற்றி சொல்லி இருப்பார்கள்; ஏரோது இராஜா குழந்தையாகிய இயேசுவை எளிதாக கொல்ல எத்தனித்திருப்பான். வேறு வழியாகச் சென்றதினால் குழந்தையாகிய இயேசு, கடவுளின் சித்தத்தின்படியும் மற்றும் தெய்வத் திட்டப்படியும் அன்று கொலை செய்யப்பட முடியவில்லை. நாமும் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

நமது ஆவிக்குறிய ஜீவியத்தில் எப்படி வான சாஸ்திரிகள், குழந்தையாகிய இயேசுவைக் கண்ட பிறகு வேறு வழியாகச் சென்றார்களோ அதுபோல, இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்பின் அனுபவத்தை இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றுக் கொண்ட ஒருவர் கண்டிப்பாக வேறு வழியாகத் தான் செல்ல வேண்டும். எப்படி சரித்திரம் இரண்டாக கி.மு. கி.பி. என்று பிரிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல், ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் இந்த கி.மு. கி.பி. இருக்க வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு முன் அவனுடைய வாழ்க்கை துன்மார்க்கம், கொலை பாதகம் போன்ற அருவருப்புகள் நிறைந்த பாவங்களால் நிறைந்திருக்கக் கூடும். இது ஒவ்வொருவரின் வாழ்விலும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக இருந்த வாழ்க்கை (கி.மு.). ஆனால், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பிறகு, அவனுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டு,

பாதை மாறி சரியான பாதை வழியாகச் செல்ல வேண்டும். இது, கிறிஸ்து பிறந்ததற்குப் பின் நிகழும் வாழ்வாக இருக்க வேண்டும் (கி.பி.). இல்லையெனில், இயேசுவின் பிள்ளை என்று சொல்லவே முடியாது. 2 கொரி 5 : 17-இன் படி *ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாக இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.*

*__உதாரணம் 1 :__* எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் வாலிபப் பிராயத்தில் மிக துன்மார்க்கமாக ஜீவித்து வந்தார். குடி, பெண்கள் சகவாசம், திருட்டு மற்றும் எல்லாவித அருவருப்பான காரியங்களும் அவருக்குள் இருந்தன. ஆனால், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பிறகு, அவருடைய வாழ்க்கை முற்றிலும் மாறி, கர்த்தரின் ஊழியக்காரனாக, தன் வாழ்வை கர்த்தரின் நாம மகிமைக்கென, நல்ல ஒரு சீஷனாக அர்ப்பணித்து ஊழியம் செய்தார். அவரது வாழ்வு முற்றிலும் மாற்றம் பெற்று, அவருடைய பாதை மாறி, சரியான வழியில் நடக்க தேவன் உதவிசெய்தார். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொண்டார்.

*__உதாரணம் 2 :__* செயிண்ட், அகஸ்டின் ரோம கத்தோலிக்க மார்க்கத்தின் தந்தையாக கருதப்படுபவர். மார்டின் லூதர் அவர்களுக்கு அடுத்தபடியாக Protestant மார்க்கத்தின் தலைவராக விளங்கினார். செயின்ட் அகஸ்டின், வாலிபனாக இருந்த பொழுது, அருவருப்புகள் நிறைந்த பாவ வாழ்க்கையில் வாழ்ந்து வந்தார். அவருடைய தாய், தன் மகனின் மனமாற்றத்திற்காக அல்லும் பகலுமாக கண்ணீர் விட்டு அழுது ஜெபித்தார்கள்.

*__புதிய மனிதனாக மாறினார்__*

ஒருமுறை அவருடைய பழைய பெண் தோழி (Girl Friend) பழைய அன்பின் பரிமாற்றத்திற்காக அவரை அழைத்தாள். அகஸ்டின் அப்பெண்ணிற்கு பதிலுரைக்கும் போது, நான் பழைய அகஸ்டின் இல்லை; முற்றிலுமாக மாறினவன். என் பாதை வேறு; என்னை முற்றிலும் மறந்து விடு; என்று கூறினார். அவர்தான் பிற்காலத்தின் செயின்ட் அகஸ்டின் என்று அழைக்கப்பட்டார். இப்போது நீங்களும் சொல்லுங்கள் நான் வேறு வழியாகச் செல்லுகிறேன் என்று.

*__III. பிரசித்தம் (நற்செய்தி அறிவித்தல்)__*
*__லூக்கா 2 : 16__*

*மேய்ப்பர்கள் குழந்தையைக் கண்டு அந்தப் பிள்ளையைக் குறித்து தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியை பிரசித்தம் பண்ணினார்கள்.* இது இயேசு கிறிஸ்து பிறந்த நன்நாளில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம். மேய்ப்பர்கள், குழந்தையாகிய இயேசு கிறிஸ்து பிறப்பின் செய்தியைக் குறித்து பிரசித்தம் பண்ணினார்கள். இது சிந்திக்கப்பட வேண்டிய செய்தியாகும். மந்தையை காத்துக் கொண்டிருந்த படிப்பறிவு இல்லாத சமுதாயத்தில் தள்ளப்பட்ட மக்கள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியைக் கேட்டவுடன் *''தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள்'' (லூக்கா 2 : 16, 17)*(இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், அவருடைய சிலுவை மரணமும் ஏசாயா தீர்க்கதரிசி மூலமாய் முன்னமே முன்னறிவிக்கப்பட்டது).

__A. *சீரிய நாட்டின் படைத்தலைவனுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி*__

II இராஜாக்கள் 5 : 3-இன் படி ஒரு சாதாரண அடிப்படை வேலைக்காரப் பெண் மூலம் சீரிய நாட்டின் படைத்தலைவனாகிய நாகமானுக்கு, சுகமும், இரட்சிப்பும் வந்தது. ஒரு சிறு பெண் செய்த மனப்பூர்வமான, கரிசனையான செயல், எவ்வளவு சிறப்பானது என்பதை எண்ணிப் பாருங்கள். இராணுவ படைத் தலைவன் நாகமான்

குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டிருந்தான். நாகமானின் வீட்டில் வேலைக்காரப் பெண்ணாக அமர்த்தப்பட்டவள் இந்த சிறிய பெண். ஆனால், அவள் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசாவைப் பற்றி நன்கு அறிந்தவள். தீர்க்கதரிசி மூலமாக நோயிலிருந்து விடுதலை கிடைத்து சுகம் கிடைக்கும் என்று சொல்கிறாள். இவள் சொன்ன நற்செய்தியின் மூலம் பெரிய அற்புதம் நடக்கிறது. குஷ்டரோகி நாகமான் சுகம் அடைந்து கர்த்தரை தெய்வமாக ஏற்றுக் கொண்டான். (II இராஜாக்கள் 5:15-17).

## *B. பஞ்ச காலத்தில் அறிவிக்கப்பட்ட நற்செய்தி*

II இராஜா 7 : 8 பஞ்ச காலத்தில் சீரியா பாளையத்திற்குச் சென்ற நான்கு குஷ்டரோகிகள் தங்களுக்குக் கிடைத்த உணவு, பொன், வெள்ளி உடைமைகள் குறித்து, தாங்கள் மட்டும் அனுபவிக்க விரும்பாமல், உடனே பிறருக்கும் அறிவிக்கும்படியாக, *நாம் செய்கிறது நியாயமல்ல; இது நற்செய்தி அறிவிக்கும் நாள் நாம் மௌனமாக இருந்தால் குற்றம் நம் மேல் சுமரும்... இப்போதும் நாம் போய் ராஜாவின் அரண்மனையிலிருப்பவர்களுக்கு இதை அறிவிப்போம்* வாருங்கள் என்று சொல்லி அறிவித்தார்கள். அதனால், இஸ்ரேல் மக்களுக்கு திருப்திகரமான ஆகாரமும் பொருட்களும் கிடைத்தன. சமுதாய மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஊருக்குள் நடமாட முடியாதவர்கள் தாங்கள் பெற்ற நன்மையைத் தாங்களும் அனுபவித்து, மற்றவர்களுக்கும் இந்த நற்செய்தியை அறிவித்தார்கள். அதினிமித்தம் அந்த நாட்டு மக்கள் அனைவரும் பயனடைந்தார்கள். நாமும் நம் வாழ்வில் இது போன்று நடக்கும் பல்வேறு நிகழ்வுகளில் பிறர் பயன்படும்படி ஆண்டவரை பிரசித்தம் செய்து, கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

## *C. சமீப காலத்தில் நடந்த உண்மைச் சம்பவம்*

உலகத்திலேயே பெரிய கிறிஸ்தவ சபை தென்கொரியாவின் தலைநகர் சீயோலில் உள்ள சபைதான். இச்சபையானது 8 இலட்சம் விசுவாசிகள் உள்ள மிகப்பெரிய திருச்சபையாகும். இச்சபையின் தலைவர் பால் யாங்கிசோ. இவர் பிறப்பில் பௌத்த மதத்தைச் சார்ந்தவர். வாலிபப் பிராயத்தில் ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்டு, மரணத்தருவாயில் இருந்த நிலையில், ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் பயிலும் சிறுபெண் இவரைப் பற்றி கேள்விப்பட்டுப் படுத்தப்படுக்கையாக இருந்த இவரைப் பார்த்து, நீங்கள் பிழைக்க வேண்டுமென்றால் கர்த்தராகிய இயேசுவை நம்புங்கள்; அவர் உங்களுக்கு சுகம் கொடுப்பார் என்று சொன்னாள். அவர் மிகவும் கோபப்பட்ட நிலையில் நீயும், உன் இயேசுவும் வேண்டாம் என்று கடிந்து சொல்லிவிட்டார். ஆனாலும், 2-ஆம் நாளும் அவரைச் சென்று பார்த்தாள். இச்சிறு பெண்ணைப் பார்த்து, "ஏய் கிறிஸ்தவ நாயே வரவேண்டாம் என்று சொல்லியும், ஏன் வருகின்றாய்?'', என்று கடிந்து கூறி அனுப்பிவிட்டார். மனம் தளராத அச்சிறு பெண், 3-ஆம் நாளும் அவரைப் பார்க்க சென்றாள். மீண்டும் அவர் கடிந்து சொன்ன போது, ஐயா நான் இனிமேல் வரவில்லை. உங்களுக்கு ஒரு புத்தகம் தருகிறேன், இதைப் படியுங்கள்; நிச்சயம் சுகம் அடைவீர்கள் என்று கூறி, புத்தகத்தை வைத்து விட்டுச் சென்றுவிட்டாள். கோபம் அடைந்த அவர், அவள் கொடுத்த வேத புத்தகத்தை மூலையில் தூக்கி எறிந்துவிட்டார். நோய் அதிகமாகவே, எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். சத்தியம் விடுதலை ஆக்குகிறது என்ற வேத வசனம் அவரது வாழ்க்கையில் கிரியைச் செய்தது. இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொண்டு, போதகராகி உலகப்புகழ் பெற்றார். அவர் சமீபத்தில் தான் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். பிரியமானவர்களே, ஒரு சாதாரண பள்ளியில் படிக்கிற சிறிய பெண் கொடுத்த நற்செய்தியின் மூலம் எவ்வளவு பெரிய காரியம் நடந்தது பாருங்கள். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## வெளிநாட்டு மிஷனெரிமார்கள்

பல வெளிநாட்டு மிஷனெரிமார்கள் இந்தியாவிற்கு குறிப்பாக தென் இந்தியாவிற்கு வந்து தங்களை வெறுத்து, தங்கள் சொத்துக்களை விற்று, வசதிகளைத் துறந்து, குடும்பங்களை பிரிந்து வந்து, ஊழியம் செய்ததினால் தான், நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு நல்ல ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவை தெய்வமாக வழிபட்டு வருகிறோம். அவர்கள் நற்செய்தியை அறிவித்து, சபைகளைக் கட்டி எழுப்பினார்கள். ஆனால், நாம் சபைகளில் சண்டை போட்டுக் கொண்டு, அமளியில் ஈடுபட்டு அவர்கள் கட்டியெழுப்பி ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்தை அவமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

வேதப் பண்டிதர்களின் கணக்குப்படி 1970 முதல் 1995 வரை இந்தியாவில் கர்த்தருடைய ஊழியம் வெகு வேகமாக செயல்பட்டு வந்தது. ஆனால், இதற்குப் பிறகு ஊழியம் சிறுகச் சிறுக குறைய ஆரம்பித்தது. பரிசுத்த தோமா இந்தியாவிற்கு வந்த பிறகு தென் இந்தியாவில் புதியவிசுவாசிகளும், சபைகளும், ஊழியக்காரர்களும் பெருகினாலும் அதன் பிறகு ஊழியம் பெருகவில்லை; பெரிய அளவில் கிறிஸ்தவ மக்களின் சதவீதமும் உயரவில்லை. காரணம் பாரமான ஊழியம் இல்லை; ஊழிய வாஞ்சையும் இல்லை. ஒருவர் டி.வி.யில் பாட்டுப்பாட பல ஆயிரங்களுடன் தொடங்கி லட்சம் ரூபாய் வரைக்கும் தாராளமாய் செலவு செய்கிறார்கள். ஆனால், ஒரு மிஷனெரி ஊழியத்திற்கு உதவி செய்ய தயக்கமடைகின்றார்கள். எல்லாக் கிறிஸ்தவர்களும் தலைவர்களும் ஒற்றுமையுடன் ஜெபித்தால் ஊழியங்கள் மறுபடியும் புத்துயிர் பெற்று, வளர்வதற்கு ஏதுவாக இருக்கும்.

## மாட்டுத் தொழுவம் லூக்கா 2 : 7

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வரை மாட்டுத் தொழுவம், பெரிய அளவில் பேசப்பட்டதோ அல்லது முக்கியத்துவம் அடைந்ததாகவோ இருந்ததில்லை; ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்குப்பின் மாட்டுத் தொழுவம் என்று உச்சரிக்காத, பேசப்படாத கிறிஸ்தவர்களே இல்லை என்று கூறும்படியாக கிறிஸ்துமஸ் காலங்களில் பாடல்கள் பாடும்போதும், தேவ செய்திகளிலும் மாட்டுத் தொழுவம் மிக முக்கியப்படுத்திக் கூறப்பட்டு, பிரசித்தப்படுகிறது.

## நம்முடைய வாழ்க்கை

ஒரு காலத்தில் நமது வாழ்க்கையும் இப்படிப்பட்ட துர்வாசனையுள்ள வாழ்க்கையாக இருந்தது. ஆனால், நமது உள்ளத்தில் / இல்லத்தில் இயேசு பிறந்ததினால் நாம் நற்கந்தம் வீசும் வாழ்க்கைக்கு மாற்றப்பட்டு இருக்கிறோம்.

## பரிதபிக்கப்பட்ட மனிதன்

இயேசு கிறிஸ்து குழந்தையாகப் பிறந்த பொழுது மக்களுக்கு மகிழ்ச்சியும், சந்தோஷமாகவும் இருந்தது. சாஸ்திரிகள் மிகுந்த ஆனந்தம் அடைந்தார்கள். மேய்ப்பர்களும், எல்லா மக்களும் மிகுந்த சந்தோஷமடைந்தனர் (லூக்கா 2 : 10). எல்லோரும் இப்படி ஆனந்தமும், மகிழ்ச்சியும் அடைந்திருந்த சமயத்தில், ஒரு மனிதனுடைய நிலை மிகவும் பரிதபிக்கப்பட்டதாக இருந்தது. அந்த மனிதன் சத்திரக்காரன். மரியாளும், யோசேப்பும் சத்திரக்காரனைத் தேடி வந்து, சத்திரத்தில் இயேசு பிறக்க இடம் கேட்ட பொழுது, இடம் இல்லை என்று சொல்லிவிட்டான். அருகில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்த பொழுது. மேய்ப்பர்களும், வான சாஸ்திரிகளும் வானத்தில் நட்சத்திரமும் வந்ததைப் பார்த்த போது, அந்த சத்திரக்காரன் மார்பில் அடித்து, ஐயோ இப்படிப்பட்ட புகழ்பெற்ற குழந்தை பிறப்பதற்கு நான் இடம் தரவில்லையே என்று புலம்பி அழுது இருப்பான்! என்ன செய்ய முடியும்! இந்த Golden Opportunity-யை இழந்து விட்டேனே என்று நினைத்து அழுது இருப்பான்.

பிரயோஜனமில்லை! இழந்த சந்தர்ப்பம் இழந்ததே. ஆனால், நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நம் இதயமாகிய சத்திரத்தில் இடம் கொடுப்போம்! கர்த்தரின் ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம்!

இவ்வளவு ஆண்டுகள் இயேசுவின் பிறந்த நாளை வெறும் பண்டிகையாகக் கொண்டாடி விட்டோம். இனிவரும் காலங்களில் கிறிஸ்துவின் பிறப்பை அர்த்தமுள்ள பண்டிகையாகக் கொண்டாடுவோம். மேற்சொன்ன 3 காரியங்களான *இரட்சிப்பு, எச்சரிப்பு / வேறு வழி* மற்றும் *பிரசித்தம் (நற்செய்தி அறிவித்தல்)* ஆகியவைகளை உள்ளடக்கிய வாழ்க்கையை மத்தேயு 1 : 21-இன் படி இரட்சிக்கப்பட்டவர்களாகவும், மத். 2 : 12-இன் படி, இயேசுவைக் கண்டபின், எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாகச் செல்கிறவர்களாகவும் ஏசாயா 35 : 8-இன் படி பரிசுத்த வழி) லூக்கா 2 : 16, 17-இன் படி, மேய்ப்பர்கள் செய்ததைப் போல இயேசுவைக் குறித்து *பிரசித்தப்படுபவர்களாகவும்* இருக்க தீர்மானிப்போம்!

லூக்கா 2 : 10-இன் படி இந்த கிறிஸ்துமஸ் தினத்தை கர்த்தர் விரும்பும்வண்ணமாக மனமகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்!

‘‘உங்களனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்”.

*- சகோ. S. தீமோத்தி*

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் சத்திய வார்த்தைப் பத்திரிகையின் சார்பாக கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

*‘‘தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்’’ (யோவான் 3 : 16).*

பாவத்தில் வாழும் மனுக்குலத்தை மீட்க, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுடவதாரம் எடுத்து, இந்த உலகத்தில் பிறந்தார். அவருடைய பிறந்த நாளை கிறிஸ்துமஸ் தினமாக நாம் கொண்டாடுகிறோம். புதிய ஆடை, கேக், பரிசுகள் மற்றும் விதவிதமான உணவு வகைகளுடன் மகிழ்ச்சியாக குடும்பத்துடன் கொண்டாடுகிறோம். ஒருவருக்கு பிறந்த நாளென்றால், அவருக்கு நாம் புதிய ஆடையும், பரிசுகளையும் கொடுக்கிறோம். இயேசு கிறிஸ்து பிறந்த பொழுது, சாஸ்திரிகள் அவருக்கு பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப் போளத்தை காணிக்கையாகக் கொண்டு வந்தார்கள். இந்த கிறிஸ்துமஸ் காலங்களிலே நாம் என்ன கர்த்தருக்கு கொடுக்கப் போகிறோம்?

வறுமையில் உள்ள உறவினர்கள், நண்பர்கள், உங்கள் தெருவில் வசிக்கும் ஏழைக் குடும்பங்கள், பிச்சைக்காரர்கள், அனாதைகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்து, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துங்கள். இந்த சிறியவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று இயேசு சொல்கிறார்.

வானசாஸ்திரிகள் கிறிஸ்துவுக்குக் கொடுத்த பொன் ஒரு விலையேறப்பட்ட பொருளாகும். நம்முடைய நெருங்கின உறவினர்களுக்கு மட்டுமே நாம் அதை பரிசாகக் கொடுப்போம். நீங்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாய் இருப்பீர்களானால், உங்கள் செல்வத்தாலும், உங்களுக்கு நேரம் அதிகமாயிருந்தால் உங்கள் பொன்னான நேரத்தையும் தேவனுக்கே மகிமையாகக் கொடுங்கள். உங்களுடைய பொன்னான தனித்திறமைகளை கர்த்தருடைய பணிக்கு உபயோகப்படுத்துங்கள்.

இரண்டாவதாக, கொடுக்கப்பட்ட தூபவர்க்கம் கர்த்தரை ஆராதிப்பதற்கு அடையாளமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ஜனத்தை எனக்காக ஏற்படுத்தினேன், இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்றார். நம்முடைய ஆராதனையில் தேவனை மகிமைப்படுத்துவோமாக!

மூன்றாவதாக, வெள்ளைப்போளம்; அது சுத்திகரிப்புக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. எஸ்தர் ராஜாத்தி ஆறுமாத காலமாய் வெள்ளைப் போளத்தினால் சுத்திகரிக்கப்பட்டாள். புதிய ஏற்பாடு காலத்தில் நம்முடைய சரீரமே தேவன் தங்கும் ஆலயமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களை நம்முடைய சரீரத்தில் பாவங்கள் சுத்திகரிக்கப்படவேண்டும். தேவனுக்கேற்ற உகந்த பலியாய் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். நமக்காய் இந்த மண்ணுலகில் பிறந்து, நம் பாவங்களை நீக்கும் பலியாக தம்மை பலியிட்ட கர்த்தருக்கு இந்த கிறிஸ்துமஸ் பரிசாக நம்மை ஒப்புக் கொடுக்க முன்வருவோமாக!

கடந்த அக்டோபர் மாதம் 2–ஆம் தேதியன்று IBT-இன் வருடாந்தரக் குடும்பக் கூடுகை ஈரோடு பிரப் சபை நினைவு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தேவ செய்தியை Pr. சாலமன் புரூஸ்லி அவர்கள் கொடுத்தார். இதே மாதம் 13–ஆம் தேதியன்று கோவை, போத்தனூரிலுள்ள Vision Church of God சபையில் IBT-இன் முன்னேற்றக் கூட்டம் நடைபெற்றது. சகோ. E.D. ராஜகுமார் அவர்கள் தேவசெய்தியளிக்க, சகோ. M. ஜான் வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இதே மாதம் 20.10.2024 அன்று மதுரையிலுள்ள All Saints Church-இல் IBT-சார்பில் இரண்டாவது ஆராதனையில் சகோ. E.D. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியளிக்க, முதல் மற்றும் இரண்டாம் ஆராதனைகளில் IBT செயலர் சகோ. வரமணிராஜ் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். சந்தர்ப்பம் அளித்த இரு சபைகளின் ஆயர்கள், சபையின் மூப்பர்கள் மற்றும் பங்கு பெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT மிகுந்த நன்றியினைத் தெரிவிக்கிறது. இதே மாதம் 16–ஆம் தேதியன்று தமிழ்நாடு, கேரளாவில் பணிபுரியும் IBT-இன் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் கோவை IBT பிரதிநிதிகள் சகோ. சேகர், சகோதரி நவமணி ஆகியோர் ஒடிஷாவிலுள்ள பணித்தளங்களையும் மற்றும் ஒடிஷாவிலுள்ள IBT-இன் சிறுவர் இல்லத்தையும் பார்வையிடச் சென்றார்கள். 21–ஆம் தேதியன்று தமிழ்நாட்டிற்குத் திரும்பினார்கள். இவர்களுக்கு பாதுகாப்பான வழிப்பயணத்தை வாய்க்கச் செய்த கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

இந்த கிறிஸ்துமஸ் தினம் எல்லா தரப்பு மக்களுக்கும் மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் கொடுக்கவும், இயேசு கிறிஸ்துவின் அன்பு உலக மக்களிடையே வந்து நிலைத்திருந்து ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கவும் ஜெபிக்கிறோம். IBT தாங்குநர்கள், சத்திய வார்த்தைப் பத்திரிக்கை வாசகர்கள் மற்றும் ஜெபப் பங்காளர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பணியில்,
*உங்கள் சகோதரன்*
***K. ஜெய்சிங்***

# பணித்தளச் செய்திகள்

*<u>மிஷனெரி / மொழிபெயர்ப்பாளர் :</u>*
*<u>சகோ. ரூபன் அந்தாரு</u>*
*<u>மொழி : தெஷியா</u>*
*<u>பணித்தளம் : அட்டிகான் (ஒடிஷா)</u>*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பெரிதான கிருபையால் மிஷனெரிப் பணிக்காக ஜெபகுடா, ஜுனாபானி, மட்பத், உக்கியாபாலி, சுரகன், தங்கரிகுடா, தனுவா, மேட்குடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகளைக் கொடுத்து, ஜெபித்து வந்தேன். நற்செய்தியைக் கூறும்போது மிகவும் ஆர்வத்துடன் கேட்டவர்கள் : சகோ. சுரேந்திரசானு, குமார், புமோ, உர்தவ், லக்காமன், சகோதரிகள் சரஸ், மோனிஷா, கோரிமணி, லலிதா மற்றும் பிபாசினி ஆகியோர். மேலே கூறப்பட்டவர்களின் வாஞ்சை குறையாமல், கர்த்தருக்குள் வளர ஜெபியுங்கள்.

இது தவிர ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை ஆராதனை அட்டிகான் பணித்தளத்திலும், உபவாச ஜெபம், வீட்டு ஜெபக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகிறது. சுகவீனமுற்றிருந்த சகோ. சுரேந்திரா, மாங்ராஜ், தேஷ்ராஜ், பானுமதி மற்றும் செப்தி ஆகியோருக்கு ஜெபித்ததின் பலனாக, கர்த்தர் இவர்கள் சுகவீனத்தை மாற்றி, பூரண சுகத்தை அருளிச் செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

----------•----------

*<u>முன்னேற்றப் பணியாளர் :</u>*
*<u>சகோ. K. சுந்தர்</u>*
*<u>பணித்தளம் : சென்னை (தமிழ்நாடு)</u>*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் என் முன்னேற்றப் பணியையும், என் குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். முன்னேற்றப் பணிக்காக லட்சுமிபுரம், கொளத்தூர், சூரப்பேட்டை, வெற்றி நகர், தணிகாசலம் நகர், ரெட்ஹில்ஸ், அம்பத்தூர், அயனம்பாக்கம், முகப்பேர், அண்ணாநகர், சாந்தி காலனி, வலசரவாக்கம், விருகம்பாக்கம், சின்மை நகர், கே.கே. நகர், எம்.ஜி.ஆர். நகர், பெரியார் பாதை, அசோக் நகர், கோடம்பாக்கம், ஆதம்பாக்கம், மடிப்பாக்கம், கீழ்கட்டளை, நன்மங்களம், சைதாப் பேட்டை, அடையாறு, தாம்பரம், கீழ்ப்பாக்கம், காந்தி நகர், வடகரை, நாவலூர், முடிச்சூர், மேலும் சில பகுதிகளுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன்.

சென்னை வலசரவாக்கத்தில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்தில் IBT ஊழியத்திற்காக ஜெபிக்கவும், வசனங்களை தியானிக்கவும் கர்த்தர் உதவி புரிந்தார். மேலும் கீழ்க்கட்டளை, காந்தி நகர் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஜெபக் கூட்டங்களிலும் பங்குபெற்று IBT ஊழியத்திற்காக ஜெபிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

திரு. ஜான்லின் என்பவரை முதன் முறையாக சந்தித்து, IBT ஊழியத்தைக் குறித்து விளக்கிக் கூறினேன். அடுத்த மாதத்திலிருந்து IBT ஊழியத்திற்கு காணிக்கை தருவதாகக் கூறினார்.

திரு. சாமுவேல் சுரேஷ் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் பெறவும், திரு. கோமாஸ் அவர்களுக்கு குடல் புற்றுநோய் குணமாகவும், திருமதி. ஜூலி ராஜன் அவர்களுக்கு சுகப்பிரசவம் ஆகவும், என் முன்னேற்றப் பணி விரிவடையவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :</u>*
*<u>சகோ. சுதிர்குமார்</u>*
*<u>மொழி : போஜ்புரி</u>*
*<u>பணித்தளம் : பெல்த்ரா ரோடு</u>*
*<u>(உத்திரப் பிரதேசம்)</u>*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

தற்போது உள்ள சூழ்நிலையில் பல வழிகளிலும் ஊழியப்பணிகளை

நிறைவேற்றுவதில் சிக்கல்கள் இருந்து வருகிறது. ஆகவே உங்களின் ஜெபப் பங்களிப்பு மிக அத்தியாவசியமானதாக உள்ளது. கடந்த மாதம் மொழி பெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு புத்தகம் யோபு அதிகாரம் 6 : 1 முதல் அதி. 38 : 41 ஆம் வசனம் வரையிலும் சரிபார்ப்புப் பணியை முடித்தேன். யோபு புத்தகத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான வசனங்கள் யோபு 2 : 9,10,12 ஆகியவையாகும்.

மிஷனெரிப் பணிக்காக துகா என்ற கிராமத்திற்குச் சென்று நற்செய்தியைக் கூறி, ஜெபித்து வந்தேன். சகோ. பிரிஜேஸ்குமார் என்பவர் வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. பெல்த்ரா ரோடு பணித்தளத்திலுள்ள போஜ்புரி சபையிலும் சில பிரச்சனைகளின் மத்தியில்தான் ஆராதனைகளும் நடந்து வருகிறது. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. செல்வராஜ்*
*பணித்தளம் : திருநெல்வேலி & மதுரை*

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மதுரையிலும், திருநெல்வேலியிலும் என் முன்னேற்றப் பணியைச் செய்தேன்.

மதுரையில் பசுமலை, அழகப்பன் நகர், எல்.ஐ.சி. காலனி, போஸ் காலனி, திருப்பாளை, கோரிபாளையம், கே.கே. நகர், ஆனையூர், நியூ ஜெயில் ரோடு, மேலப்பொன்னகர், ஜோன்ஸ்புரம், திருப்பாவை, பேங்க் காலனி, ஆத்திகுளம், தெற்கு நகர் வீதி ஆகிய இடங்களிலும் திருநெல்வேலியில் கீழநத்தம் ரோடு, பேட்டை, கவிக்காடு, சேவியர் காலனி,மகாராஜ நகர், மேலரத வீதி, திசையன்விளை, மடத்தச்சன் பாடு, சாந்தி நகர், பாரதி நகர் மற்றும் திருநெல்வேலி டவுன்.

திருநெல்வேலியில் உள்ள அனைத்து சபை பாஸ்டர்களையும் சந்தித்து, IBT முன்னேற்றக் கூட்டங்கள் அங்கு நடத்தவேண்டுமென கூறப்பட்டுள்ளது. அதிகமான சபைகளில் சந்தர்ப்பம் கிடைக்கவும், இதன் வாயிலாக IBT ஊழியம் விரிவாக்கப்படவும், என் முன்னேற்றப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. ஹனுமந்த்*
*மொழி : லம்பானி*
*பணித்தளம் : ரேனிபென்னூர் (கர்நாடகா)*

கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!


கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் சிறுவர் வேதாகமம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. மேலும் புதிய ஏற்பாடு சரிபார்ப்பு செய்து முடிக்கப்பட்ட Printout, IBT அலுவலகத்திலிருந்து பெற்று, அதையும் வாசித்து, சரிபார்ப்பு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. மிஷனெரிப் பணிக்காக குஸ்கர், ஹலகேரி, தேவநகரி, மகோட், இட்டாக், மெட்லேரி ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து, ஜெபித்து வந்தேன். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. சுனில்குமார் சபாடி*
*மொழி : கடபா*
*பணித்தளம் : கெல்லகுடா (ஒடிஷா)*

தேவனுக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியில் 1 நாளாகமம் புத்தகத்தில் அதிகாரம் 6 : 1 முதல் அதி. 21 : 12 ஆம் வசனம் வரையிலும் பாரா டெக்ஸ்ட் Para Text Software-இல் கணினியில் கீ-இன் செய்யப்பட்டது. மிஷனெரிப் பணிக்காக சனக்குடா, துதாரி, பானாமாலிபுட் மற்றும் பங்கைபுட் ஆகிய கிராமங்களுக்குச் சென்று சகோ. சதானா, பபித்ரா, சௌன்டா மற்றும் கோவிந்தா ஆகியோரைச் சந்தித்து கடபா மொழியில் வெளியிட்ட மாற்கு நற்செய்தி நூலைக் கொடுத்து, மொழிபெயர்ப்புப் பணியைக் குறித்தும் விளக்கிக் கூறி நற்செய்தியையும் கூறி, அவர்களுக்காக ஜெபித்தேன். என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



# ராபர்ட் கால்டுவெல்

## (கி.பி. 1814 - 1891)

*''சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்'' (ஏசாயா. 10 : 15).*

### இளைய தலைமுறியனருக்கு ஒரு சவால்

இளைய தலைமுறையினரும் இந்த மாமனிதரின் மகாபெரிய தியாக வாழ்வையும், அருட்பணிகளையும், தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டினையும் அறியாமை இருளில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்கள் அறிவொளி பெற வேண்டுமென்பதின் அவருடைய பெரும் முயற்சிகளையும், மெய்யான தெய்வத்தை அறிந்து மக்கள் ஆன்மீக ஒளியடைய வேண்டுமென்பதில் அவர் அடைந்த பாடுகளையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், நமது இளைஞர்களுக்கு தங்கள் முன் நிறுத்திக் கொண்டு பின்பற்றத்தக்கதான நன்முன்மாதிரிகள் (ROLL MODEL) தேவை. இப்பொழுது, நமது இளைஞர்கள் யாரை நன்முன்மாதிரியாக நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை அவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாமும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு இளைஞனிடம் நீ பின்பற்றுகிற முன்மாதிரி யார்? என்று கேட்டால் அவன் என்ன சொல்லக் கூடும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

### ஏழ்மையில் எதிர்நீச்சல்

ராபர்ட் கால்டுவெல் 1814-ஆம் ஆண்டு மே 7-ஆம் நாள் அயர்லாந்தில் பெல்பாஃஸ்ட் என்ற ஊரில் ஸ்காட்டிஷ் பெற்றோருக்குப் பிறந்தார். பின்னர், அவர்களுடைய குடும்பம் இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவிற்கு (GALASGOW) ராபர்ட் கால்டுவெல் இடம் மாறினார்கள். குடும்பத்தின் ஏழ்மையினால் தனது 9-வது வயதிலேயே தங்களது குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் கிளாஸ்கோவ் நகரில் (GALASGOW) வேலை செய்ய ஆரம்பித்தார். இளம் வயதிலேயே குடும்ப பாரத்தில் பங்கேற்கும் அவரது மனப்பாங்கைப் பாருங்கள். தனது வேலையோடு தன்னுடைய படிப்பிலும் தொய்வு ஏற்படாமல் படித்தார். பின்னர் டப்ளின் சென்று சித்திரக்கலையில் பயிற்சி பெற்றார்.

### மிஷனெரிப்பணிக்கு அர்ப்பணிப்பு

தன்னுடைய 16-வது வயதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார். இளம் வயதிலேயே அவருக்கு ஏற்பட்ட தெய்வீக சிந்தனையே, தெய்வத்திற்கு முன், தான் யார் என்பதை விளங்கிக் கொள்ள ஏதுவாயிற்று. தான் பாவி என்பதையும் தனது பாவங்களை மன்னிக்க இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தேவை என்பதையும் உணர்ந்து கொண்டார். கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வுக்கு வந்தார். மீண்டும் அவர் கிளாஸ்கோவுக்குத் திரும்பினார். அங்குள்ள திருச்சபையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு ஆர்வத்தோடு செயல்பட்டார். தனது 19-வது வயதில் இந்தியாவுக்கு மிஷனெரியாகச் செல்ல வேண்டுமென்று விரும்பி, லண்டன் மிஷனெரி சொசைட்டியை (LMS) அணுகினார். அந்த சொசைட்டி அவரை அங்கீகரித்து கிளாஸ்கோவ் பல்கலைக் கழகத்தில் இறையியல் பயில வாய்ப்பளித்தது. அதே வேளையில் லத்தீன் கிரீக் ஆகிய மொழிகளிலும் கற்றுத் தேர்ந்தார். அவர் தனது படிப்பை வெற்றிகரமாக முடித்தார். (LMS) சொசைட்டி அவரை மிஷனெரியாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. புறப்படுவதற்கு முன்பாக சுகவீனமாகயிருந்த தன் தாயாரைப் போய் சந்தித்தார். அவருடைய வார்த்தையின்படியே சொன்னால் "நான் என் தாயார் படுத்திருந்த கட்டில் அண்டையில் சென்று முழங்கால்படியிட்டேன். என் தாயார் என் இருகரங்களாலும் என்னுடைய கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, *''மகனே,*

*நான் என் மனப்பூர்வமாக தேவனுடைய ஊழியத்திற்கு உன்னை ஒப்புவிக்கிறேன். இதில் எனக்கு எந்த மனக்குறைவும் இல்லை''* என்று சொல்லி என்னை அனுப்பினார்கள். நான் எழுந்து புறப்பட்டேன். அதற்குப்பின் நான் என் பெற்றோரைப் பார்க்கவில்லை". அவர் தன் தாயிடம் விடைபெற்றுச் சென்ற காட்சியை கற்பனை செய்து பாருங்கள். இப்படிப்பட்டதொரு ஊழியத்திற்குச் செல்ல நாம் ஆயத்தமா? மேரி ஆன் என்ற கப்பலில் புறப்பட்டு 5 மாதங்களாக தொடர்ந்து கப்பலில் பிரயாணம் செய்து ஜன. 8, 1838-இல் சென்னை வந்து சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 24. சென்னையில் வெப்பேரியிலுள்ள மிஸ்டர். ஸ்மித் (Mr. Smith) என்ற மிஷனெரியின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிறகு, அங்கிருந்து மிஸ்டர். ட்ரூ (Mr. Drew) என்ற மிஷனெரி வீட்டிற்குச் சென்றார். சுமார் ஓராண்டிற்கு மேலாக அவரோடு தங்கினார். அவர் சிறந்த தமிழ் வித்வான். அவரிடம் தமிழைக் கற்றுக் கொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பு கால்டுவெல்லுக்கு கிடைத்தது. தமிழ் இலக்கிய வளமும், மொழி வளமும், மிகவும் பழமையான மொழி என்பதையும் கண்டு கொண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தமிழோடு தெலுங்கு மொழியையும் கற்றுக்கொண்டார். மிகக் குறுகிய காலத்திலேயே தமிழில் நல்ல புலமை பெற்றார்.

## இடையன்குடிக்குப் பயணம்

சென்னையை விட்டுப் புறப்பட்டு நீலகிரி சென்றார். அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். பிஷப் ஸ்பென்சர் அவர்களாலே குரு பட்டம் பெற்றார். பிறகு, கால்நடையாகவே நெல்லை மாவட்டத்திலுள்ள இடையன்குடி என்ற கிராமத்திற்குச் சென்றார். போகும் வழியில் பலதரப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களோடு அன்போடு பேசினார். அவர்களோடு தமிழில் பேசியது அவர்களுக்கு பெரிய ஆச்சரியத்தை அளித்தது. அவரது கனிவான பேச்சு மக்களை ஈர்ப்பதாக இருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் பேசுகிற தமிழில் வித்தியாசத்தைக் கண்டார். ஒரு ஊரில் தங்குவதற்கு ஒரு சத்திரத்தில் இடம் கேட்டார். அது பிராமணர் அல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட மாட்டாது என்று மறுத்து விட்டனர். அது அவருக்கு பெரும் வியப்பை அளித்தது. ஏன் இந்தப் பாகுபாடு என்று அவர் மனதை மிகவும் உறுத்தியது. அவர் இடையன்குடி சேருவதற்கு முன்பாக நாசரேத், முதலூர் ஆகிய இடங்களில் தங்கிக் கடந்து சென்றார். இடையன்குடி செல்வதற்கு வழியைத் தவறவிட்டுவிட்டார். எனினும், மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் இரவு வெகுநேரம் கழித்து இடையன்குடி வந்து சேர்ந்தார். அவரது தளராத முயற்சி எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது. (TENACITY OF PURPOSE) அவர் விரும்பிய இடத்திற்கு வந்து சேர்ந்தார். இங்கிலாந்தில் அவர் அனுபவித்த இதமான குளிர் இங்கு இல்லை. வெயிலின் கொடுமை மிகப் பயங்கரமாக இருந்தது. ஆனாலும், அவர் சோர்ந்து போகவில்லை. இங்குள்ள சீதோஷ்ண நிலையை மூன்று காலங்களாகப் பிரிக்கலாம். "சூடு, மிகச்சூடு, மிகமிகச் சூடு" என்று கால்டுவெல் அவர்கள் வேடிக்கையாகச் சொல்வார்களாம். அப்படிப்பட்ட சூடான சீதோஷ்ண நிலையிலும் அவர் அயராது உழைத்தார் என்றால் அதை சிந்தித்துப் பாருங்கள். மின்சார வசதி, போக்குவரத்து வசதி இவைகள் இல்லாத சூழ்நிலையிலும் அவர் ஒருநாளும் முறுமுறுக்கவில்லை (HE NEVER GRUMBLED).

## நற்செய்திப் பணி

இடையன்குடியும் அதன் சுற்றுப்புறமும் செம்மண் தேரிகள் (SAND DUNES) நிறைந்த இடம். அடிக்கடி ஏற்படுகிற வறட்சியின் காரணமாக அப்பகுதி பாலைவனம்போல காட்சியளிக்கும். அங்கு பனைமரம் மாத்திரமே வளரும். அதுவே அம்மக்களுக்கு வாழ்வழிக்கும் ஆதாரமாக இருந்தது. அப்பகுதி நாடார்கள் அல்லது சாணார்கள் என்று சொல்லப்படுகிற தாழ்த்தப்பட்ட மக்களே வாழ்ந்து வந்தனர். பனை ஏறி, பதனி இறக்கி அதைக் காய்ச்சி கருப்பட்டியாக்கி விற்பதே அவர்களது தொழில். கிராமத்திலுள்ள பிள்ளைகளையெல்லாம் ஒன்று சேர்ந்து வகுப்பு நடத்துவதுபோல் நடத்துவார். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் சொல்லிக் கொடுப்பார். மரத்தடி நிழலில் சில பெரியவர்கள் வாலிபர்கள் வேலைகள் செய்துவிட்டு வந்து இளைப் பாறுவார்கள். அந்த நேரத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு நற்செய்தியைச் சொல்லுவார். *"என்ன இவரு புதுசா சொல்றாரு. இயேசு கிறிஸ்துங்கிற சாமி நாம அவர ஏத்துக்கிட்டுப் போனா நம்ம செஞ்ச*

*பாவங்களை எல்லாம் மன்னிச்சி, நாம செஞ்ச பாவத்துக்காக தெய்வம் நியமிச்சிருந்த தண்டனையும் தன்மேல் ஏத்துக்கிட்டு தன் உயிரையே சிலுவையில் அறைஞ்சி கொல்லப்பட ஒப்புக்கொடுத்தாரமே. செத்து அடக்கம் பண்ணபிறகு மூணாவதுநாள் உயிரோடு எந்திரிச்சிட்டாராமே. நாம செத்த பின்னாலேயும் அந்த சாமியோடு இருக்கலாங்கிறாரு''.* அவர் கூறிய நற்செய்தி அவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக எட்ட ஆரம்பித்தது. சிலர் அதை விசுவாசித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். அண்டை கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை சொல்ல ஆரம்பித்தார். கிராமங்களில் படிப்பறி-வின்றிருக்கும் பிள்ளைகளைக் கண்ணோக்கினார். அவர்களுக்கென்று முதல் முறையாக ஆண்களுக்கு ஒரு பள்ளியை ஆரம்பித்தார். பனை மரங்கள் பலன் கொடுக்கும் காலங்கள் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதில்லை. பின்னர், ஒருவாறாக அவர்களுக்கு ஆர்வம் ஏற்படச்செய்து பின்னர், பெண் பிள்ளைகளுக்கும் ஒரு பள்ளியை ஆரம்பித்தார். இடையன்குடி வட்டாரத்திலேயே அவைகள் தான் முதல் பள்ளிகள்.

## *நற்செய்தி பரப்பும் அமைப்பு*

கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதற்கு ஆர்வமுள்ள விசுவாசிகளைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு பயிற்சியளித்து கிராமங்களுக்கு அனுப்பினார். அதற்கென *''இடையன்குடி சுவிசேஷ பிரபல்ய சங்கம்''* (Idayangudy Society for Propogation of the Gospel) என்ற ஒரு அமைப்பையும் உருவாக்கினார். அது வெற்றிகரமாக செயலாற்றியது. அந்த அமைப்பின் செயல்பாட்டைக் குறித்து கிழக்குத் தருவையைச் சேர்ந்த ஞானக்கண் என்பவர் *''சுவிசேஷத்தை வாயினால் கூறுவோம், நற்செய்தியை செயலில் காட்டுவோம். ஆயக்காரனுடைய மனமாற்றமே தேவனுடைய ராஜ்ய அபிவிருத்திக்கு அதிகமாக பயனளித்தது''* என்று சொன்னார் (லூக். 18 : 13,14). ஆனைகுடி தானியேல் *''வெகு தொலைவிலிருந்து வந்து ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் அர்ப்பணிப்போடு நமக்கு சுவிசேஷம் அறிவிக்கிறார்கள். அப்படியானால், நாம் நம் பக்கத்திலுள்ள மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பது நமது கடமையல்லவா?''* என்றார். இப்படிப்பட்ட ஊழியத்தின் காரணமாக முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் உருவானார்கள்.

கால்டுவெல் ஆரம்பித்த இந்த நற்செய்தி அறிவிக்கும் அமைப்பின் செயல்பாடு நல்ல வளர்ச்சியைத் தந்தது. கிறிஸ்தவம் அந்த வட்டாரத்தில் தழைத்தோங்க ஆரம்பித்தது. இந்தியாவில் பணியாற்றிய அநேக கிறிஸ்தவ மிஷனெரிகள் இந்த முறைமையின் செயல்பாட்டைக் கண்டு அவரவர்களுடைய பணித்தளங்களிலும் ஆரம்பித்தனர்.

## *ஆலயப் பணி*

இடையன்குடியில் ஒரு ஆலயத்தைக் கட்டி எழுப்பத் திட்டமிட்டார். மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள கிறிஸ்தவர்களே இருந்த காலத்தில் ஆயிரம்பேர் அமரும் அளவுக்கு ஒரு பெரிய தொலைநோக்கோடு ஆலயத்தைக் கட்டினார். அதற்கு ஏற்ற ஒரு கோபுரத்தையும் அமைத்தார். இன்று கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை நாட்களில் ஆலயம் கொள்ளாத அளவுக்கு வெளியே பந்தல்போடும் அளவுக்கு கிறிஸ்தவர்களின் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது.

## *தமிழ்த் தொண்டு*

தமிழ்மொழியையும், இணை மொழிகளையும் ஆராய்ந்து *''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்''* என்ற அரிய நூலை எழுதினார். சுமார் 130 ஆண்டுகள் மேலாகியும்கூட இன்னும் அந்நூல் படிப்பவர்களுக்கு வழிகாட்டியாகவே உள்ளது. இந்நூலை 1944-இல் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும், 1955-இல் புலவர் கா. கோவிந்தன் அவர்களும் அந்த அரியநூல் கிடைப்பதற்கு அரிதாக இருந்தபடியால் அந்நூலை மறுபதிப்பு செய்தனர்.

டாக்டர் கால்டுவெல் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளை நினைவு கூறும் வகையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற பொழுது, தமிழக அரசு அவரது சிலையை மெரினா கடற்கரையில் நிறுவி பெருமை செய்தது.

- தொடரும்

# உலகச் செய்திகள்

★ காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42,289-ஆக அதிகரித்துள்ளது.

★ 2024-ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க பேராசிரியர்கள் சைமன் ஜாக்சன், ஜேம்ஸ் ஏ. ராபின்சன் மற்றும் டேரன் அசெமோக்லு ஆகிய மூவருக்கும் சுமார் ரூ. 8.91 கோடி பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் என்று ராயல் ஸ்வீடிஸ் அறிவியல் அகாதெமி தெரிவித்துள்ளது.

★ 2024-ஆம் ஆண்டுக்கான வேதியிலுக்கான நோபல் பரிசு டேவிட் பக்கெர், டெமிஸ் ஹஸ்ஸாபிஸ், ஜான் ஜம்பெர் ஆகிய மூவருக்கு பரிசுடன் ரூ. 8.91 கோடி ரொக்கப் பரிசும் வழங்கப்படும். இந்தப் பரிசுத் தொகையில் பாதி தொகை டேவிட் பக்கெருக்கும், மீதி பாதி தொகை ஹஸ்ஸாபிஸ், ஜம்பெர் ஆகிய இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

★ டாடா நிறுவனத்தை உலகம் முழுவதும் விரிவடையச் செய்தும் நாட்டுக்கு பெருமை சேர்த்த தொழிலதிபர் ரத்தன் டாட்டா (86) மும்பை மருத்துவமனையில் 09.10.2024 அன்று காலமானார். அவருக்கு 2000-ஆம் ஆண்டு பத்ம பூசன் விருதும், 2008-இல் பத்ம விபூஷன் விருதும் வழங்கி மத்திய அரசு கௌரவித்தது.

★ 2024-ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு தென்கொரிய பெண் எழுத்தாளரான ஹான் காங்குக்கு வழங்கப்பட்டுள்ளது. வரலாற்று அதிர்ச்சிகள், வன்முறை மற்றும் மனித வாழ்வின் துன்பம் மற்றும் பலவீனத்தை வெளிப்படுத்தும் கவிதை உரைநடை படைப்புக்காக அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசுடன் ரூ. 8.91 கோடி ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

★ ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் முதலாவது முதல்வராக 16.10.2024 அன்று தேசிய மாநாட்டுக் கட்சி துணைத்தலைவர் ஓமர் அப்துல்லா பதவியேற்றார். அவருடன் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ள சுரீந்தர் சௌதரி மற்றும் 4 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

# கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!




*''உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக'' என்று சொல்லி, தேவனைத் துதித்த பரமசேனையின் திரள் கூட்டத்தோடு நாமும் சேர்ந்து கிறிஸ்துமஸ் தினத்தில் தேவனை மகிமைப்படுத்துவோம்''.*

ஒளிமயமான 2025-ஆம் ஆண்டாகிய புதிய வருடத்திற்குள் செல்லவிருக்கிற நம் அனைவரையும் தேவன் தாமே வழிநடத்திச் செல்வாராக என வாழ்த்துகிறோம்! உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கிறோம்!!

– இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் (IBT)

# தேவை

*IBT மொழிபெயர்ப்பாளருக்கு கொடுப்பதற்கு 1 Laptop தேவைப்படுகிறது. இதற்கான தொகை ரூ. 45,000 ஆகும். இதற்கு Sponser கிடைப்பதற்காக ஜெபியுங்கள்.*

*- IBT பொருளாளர்*

# IBT ஊழியர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதி



நமது ஊழியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மற்றும் கோயா சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் வெகுமதி வழங்க ரூ. 5 லட்சம் நிதி தேவைப்படுகிறது. இது சம்பந்தமாக உங்களில் பலருக்கு நமது IBT பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாக கிறிஸ்துமஸ் கவர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் “கவர்” பெறாதவர்கள் உங்களது காணிக்கையை ‘கிறிஸ்துமஸ் வெகுமதி’ என்று குறிப்பிட்டு தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலமாகவும் அல்லது கீழே உள்ள QR Code-ஐ Scan செய்தும் உங்கள் கிறிஸ்துமஸ் வெகுமதியை அனுப்பி, ஊழியர்களை ஊக்குவிக்கும்படியாக உங்களை வேண்டிக் கொள்கிறோம். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

*- பொருளாளர்*

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM BHARAT INTERFACE FOR MONEY | UPI UNIFIED PAYMENTS INTERFACE

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

உங்கள் வருட சந்தாவைப் புதுப்பிக்காமலிருந்தால் ரூ. 100/–ஐ கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி, “சத்திய வார்த்தை” பத்திரிகையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். IBT உண்டியல் பெட்டி வைத்திருப்பவர்கள், அதிலுள்ள காணிக்கையை கொடுப்பதற்கு எங்கள் அலுவலகத்திற்கு தெரிவித்தால், அதை பிரதிநிதிகள் அல்லது முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாகப் பெற்றுக் கொள்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*– ஆசிரியர்*

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :–

**WORD PUBLISHERS TRUST, Civil Aerodrome Road, Coimbatore - 641 014. Cell : 90470 57414**

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. திட்டமிட்டபடியே IBT-இன் 2025-ஆம் வருடக் காலண்டர்கள் அச்சிடப்பட்டு, பிரதிநிதிகளுக்கும், முன்னேற்றப் பணியாளர்களுக்கும், கடந்த மாத இறுதியில் அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். அனுப்பப்பட்ட காலண்டர்கள் பிரதிநிதிகளுக்கும், முன்னேற்றப் பணியாளர்களுக்கும் தாமதமின்றி கிடைக்கவும், அதன்பின் IBT தாங்குநர்கள், பங்காளர்களுக்கு விரைவில் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

2. முன்னேற்றப் பணியாளர்களின் ஒடிஷா பணித்தளப் பார்வை நல்ல முறையில் நடக்கவும், பாதுகாப்பான பயணத்தை கர்த்தர் வாய்க்கச்செய்த கர்த்தருக்கு துதிகளை ஏறெடுங்கள். இப்பயணத்தின் வாயிலாக ஒடிஷா பணித்தள ஊழியர்கள் மற்றும் முன்னேற்றப் பணியாளர்களுக்கு அவரவர் பணிகளில் உற்சாகமும், பாரமும் கிடைத்து, அர்ப்பணிப்போடு தங்கள்பணிகளில் ஈடுபடவும், தங்கள் அனுபவங்களை IBT தாங்குநர், பங்காளர்களுக்கு பகிர்ந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

3. இதுவரை IBT ஊழியங்களையும், ஊழியர்களையும் தாங்கி வரும் IBT தாங்குநர்கள், பங்காளர்களுக்காக கர்த்தரைத் துதியுங்கள். இவ்வருடமும் IBT ஊழியங்களுக்கும், பாப்பன்பள்ளி சிறுவர், சிறுமியர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதி கொடுக்க தாங்குநர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், இதன் மூலமாக கொடுக்கும் குடும்பங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

4. இன்னும் இயேசு கிறிஸ்துவை அறியாத நம் நாட்டு மக்கள் இவ்வருட கிறிஸ்துமஸ் மூலமாக கர்த்தரை அறியவும், அநேகக் குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.

**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd December 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**